
Vol.21 | No. 6 | June 2017



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



## Sinai Retreat Centre
## Inauguration
07.05.2017



Tamil Intensive Course - May 21-27




Shenkottai Mission Visit



KKSSS Educare Camp - May 14-21

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 6 June 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

*Patron*
His Excellency
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| சிறுமலர் | 05 |
| இளைஞர் இயக்கம் | 06 |
| இல்வாழ்வு இயக்கம் | 08 |
| Feast and B'days | 09 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 09 |
| சமூக சேவை சங்கம் | 10 |
| வின்செண்ட் தே பவுல் | 12 |
| அருட்சகோதரர்களிடமிருந்து.. | 14 |
| மறைவட்டச் செய்திகள் | 16 |
| மறைமாவட்டச் செய்திகள் | 19 |
| மறைமாவட்ட பள்ளிகள் | 20 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/70/2017

Dear and Reverend Fathers, 30 May 2017

Greetings from Bishop's House, Thuckalay!

The month of June is dedicated to the Sacred Heart of Jesus. The devotion to the Sacred Heart of Jesus invites us all to turn to the heart, the deepest root and foundation of every person, the focus of our affective life and, in a word, his or her very core. During these days, we need to contemplate the two hearts: the Heart of Jesus, the Good Shepherd and our own heart as Priests.

The Heart of the Good Shepherd is not only the Heart that shows us mercy, but is itself mercy. There the Father's love shines forth. In it all of us are welcomed and understood as we are with all our sins and limitations. We can know with certainty that we are chosen and loved. Contemplating that heart, we renew our first love: the memory of that time when the Lord touched our souls and called us to follow him, the memory of the joy of having cast the nets of our life upon the sea of his Word.

The Heart of the Good Shepherd tells us that his love is limitless; it is never exhausted and it never gives up. There we see his infinite and boundless self-giving; there we find the source of that faithful and meek love which sets free and makes others free; there we constantly discover anew that Jesus loves us even to the end, without ever being imposing.

The Heart of the Good Shepherd reaches out to us, above all to those who are most distant. It is there that the needle of his compass inevitably points to. It is there that we see a particular weakness of his love, which desires to embrace all and lose none.

Contemplating the Heart of Christ, we are faced with the fundamental question of our Priestly life: Where is my heart directed to? Our ministry is often full of plans, projects and activities: from catechesis to liturgy, to works of charity, to pastoral and administrative commitments. Amidst all these, we must still ask ourselves: What is my heart set on, where is it directed to, and what is the treasure that it seeks? For Jesus says: "Where your treasure is, there will your heart be also" (Mt 6:21).

The great riches of the Heart of Jesus are two: the Father and ourselves. His days were divided between prayer to the Father and encountering people. So too the heart of Christ's Priests knows only two directions: the Lord and his people. The heart of the Priest is a heart pierced by the love of the Lord. For this reason, he no longer looks to himself, but is turned towards God and his brothers and sisters. It is no longer a fluttering heart, allured by momentary whims, shunning disagreements and seeking petty satisfactions. Rather, it is a heart rooted firmly in the Lord, warmed by the Holy Spirit, open and available to our brothers and sisters.

To help our hearts burn with the charity of Jesus, the Good Shepherd, dear Fathers, we can train ourselves to do three things, namely, seek out, include and rejoice.

The prophet Ezekiel reminds us that God himself goes out in search of his sheep. As the Gospel says, he "goes out in search of the one who is lost" (Lk 15:4), without fear of the risks. Without delaying, he leaves the pasture and his regular workday. He does not put off the search. He immediately sets to it; his heart is anxious until he finds that one lost sheep. Having found it, he forgets his weariness and puts the sheep on his shoulders, fully content. Similarly, a Priest must seek out for the lost members of his parish.

Christ loves and knows his sheep. He gives his life for them, and no one is a stranger to him. His flock is his family and his life. He is not a boss to be feared by his flock, but a shepherd who walks alongside them and calls them by name. He wants to gather the sheep that are not yet of his fold. So it is also with the Priest of Christ. He is anointed for his people, not to choose his own projects but to be close to the real men and women whom God has entrusted to him. No one is excluded from his heart, his prayers or his smile. With a father's loving gaze and heart, he welcomes and includes everyone, and if at times he has to correct, it is to draw people closer. He stands apart from no one, but is always ready to dirty his hands. As a minister of the communion that he celebrates and lives, he does not await greetings and compliments from others, but is the first to reach out, rejecting gossip, judgments and malice. He listens patiently to the problems of his people and accompanies them, sowing God's forgiveness with generous compassion. He does not scold those who wander off or lose their way, but is always ready to bring them back and to resolve difficulties and disagreements.

Finally, God is full of joy. His joy is born of forgiveness, of life risen

and renewed, of prodigal children who breathe once more the sweet air of home. The joy of Jesus, the Good Shepherd, is not a joy for himself alone, but a joy for others and with others, the true joy of love. This is also the joy of the Priest. He is changed by the mercy that he freely gives. In prayer he discovers God's consolation and realizes that nothing is more powerful than his love. He thus experiences inner peace, and is happy to be a channel of mercy, to bring men and women closer to the Heart of God. Sadness for him is not the norm, but only a step along the way; harshness is foreign to him, because he is a shepherd after the meek Heart of God.

Dear Fathers, in the Eucharist that we celebrate daily, we need to rediscover each day our identity as shepherds. In every Mass, we need to make our own the words of Christ: "This is my body, which is given up for you." Our devotion to the Sacred Heart of Jesus should help us become good shepherds after the heart of Jesus. Let us constantly renew the promises that we made at our Priestly ordination during this month.

**CONCLUSION**

The month of May is coming to a close. We have honoured Mother Mary through various devotional practices during the month. As we enter the month of June, all our students are busy with preparing themselves to enter the portals of their educational institutions to begin another year of learning. I wish them happy schooling. I also remember all the Fathers, Brothers and Sisters who run the various educational institutions in the Eparchy and pray that the new academic year may be fruitful. My wish is that you will be able to form our young people into God-fearing and compassionate human beings. We need to re-dedicate ourselves to enter into the world of the young so that we can instil in them values, which are so essential in today's world.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

✠George Rajendran SDB
Bishop of Thuckalay

---

**ஆயர் திருநிலைப்பாடு**

கோட்டாறு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை நசரேன் சூசை அவர்களின் ஆயர் திருநிலைப்பாடு 2017, மே 29 அன்று, கோட்டாறு ஆயர் இல்ல வளாகத்தில் நடைபெற உள்ளது.

சிறுமலர்
MISSION LEAGUE



# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

## தேசிய தொடக்க விழா

சிறுமலர் மிஷன் லீக் இயக்க தேசிய தொடக்க விழா 27.5.2017 அன்று காலை 10 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் குருகுல முதல்வர் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. தேநீர் இடைவேளைக்குப்பின் தேசிய மிஷன் லீக் இணை இயக்குநர் அருட்சகோதரி ஆன்



கிரேஸ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து தேசியத் தலைவர் சகோ. பினோய் பள்ளிப்பறம்பில் அவர்கள் ஒளியேற்றி மிஷன் லீக் இயக்க வளர்ச்சி குறித்து தலைமை யுரையாற்றினார். தொடர்ந்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், சி.எம். எல் மண்டல அமைப்பாளர் சகோ. திரு. ஜாண் காஞ்ஞிரம்காட்டு, சி.எம்.எல் தமிழக மண்டல இயக்குநர் அருட்தந்தை ஜினோய், தக்கலை மறைமாவட்ட சி.எம். எல் பொதுக்குழு உறுப்பினர் திருமதி. லதா ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினர். பின்னர் இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் 2017-2018ஆம் ஆண்டின் செயல்முறைகளை வெளியிட அதன் பிரதியை சென்னை மறைமாவட்ட பிரதிநிதி பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து தேசிய செயற்குழு உறுப்பினர் திரு. ஞானதாஸ் அவர்கள் நன்றி நவில, சூசைபுரம் மறைவட்ட மாணவிகள் மிஷன் லீக் இயக்க கீதம் பாடினர். தொடர்ந்து நடைபெற்ற மதிய உணவுடன் விழா இனிதே நிறைவு பெற்றது. இதில் 55 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மிஷன் லீக் தியானம்

ஆறுகாணி மறைமாவட்ட உறுப்பினர்களுக்கான தியானம் மற்றும் கருத்தரங்கு 28.5.2017 அன்று மதியம் 2 மணிமுதல் 4 மணி வரை நடைபெற்றது. தியானத்தை அருட்தந்தையர்கள் ஆன்றணி, டோபின் ஆகியோர்கள் வழிநடத்தினர். எஸ் எச், சி எம் சி, எப் சி சி அருட்சகோதரிகள் தங்கள் சபை வரலாறு, இறையழைத்தல் பற்றியும் எடுத்துக் கூறினர். சுமார் 35 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஷோஜோ,
இயக்குநர்.

# YOUTH APOSTOLATE
# இளையோர் பணி

### முப்பெரும் விழா

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் இளையோர் மாமன்றம், எஸ்.எம். ஒய்.எம் அறிமுகம் மற்றும் இளம் சாதனையாளர் விருது ஆகிய முப்பெரும் விழா 19.05.2017 அன்று மாலை 6.30 மணியளவில் பெயர்பதிவுடன் தொடங்கி 21.05.2017 அன்று மாலை 3.30 மணியளவில் நிறைவு பெற்றது.

### மாமன்ற தொடக்க விழா

இளையோர் மாமன்ற தொடக்க விழாவை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் 20.05.2017 அன்று காலை 9 மணிக்கு அறிமுக உரையாற்றி தொடங்கி வைத்தார். பின் மாமன்றத்தை அருட்தந்தை டென்சிங் அவர்கள் 'இன்றைய உலகில் இளைஞர்கள்'





அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் 'அழைத்தலில் தெளிந்துணர்தல்' அருட்தந்தை கபிரியேல் 'இறை நம்பிக்கை மற்றும் மேய்ப்புப் பணி' என்ற சிந்தனைகளில் வழிநடத்தினர்.

பின்பு இளைஞர்கள் குழுவாக பிரிக்கப்பட்டு மாமன்ற கருத்துரைகள் பற்றி விவாதித்து குழுக்களுக்கு கொடுக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இக்குழு விவாதங்களை அருட்தந்தை பெலிக்ஸ், அருட்தந்தை கபிரியேல், சகோ. சகாயம் ஆகியோர் வழிநடத்தினர்.

### எஸ்.எம்.ஒய்.எம்(SMYM) அறிமுகம்

தக்கலை இளைஞர் இயக்கம் சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் அங்கமாக செயல்படுகிறது என்பதன் அறிமுகவிழா 20.05.2017 மாலை 3.30 மணியளவில் ஆரம்பமானது. இதற்கு எஸ்.எம்.ஒய்.எம் இயக்குநர் அருட்தந்தை செபாஸ்டின், தேசிய தலைவர் சகோ. அருண் மற்றும் துணைச் செயலர் சகோ. அஞ்சனா ஆகியோர் கலந்து கொண்டு விதிமுறைகள், அடிப்படை நோக்கங்கள் குறித்து எடுத்துரைத்தனர். எஸ்.எம்.ஒய்.எம் விதிமுறை கையேடு மற்றும் கொடி வழங்கப்பட்டது.

### சாதனையாளர் விருது

21.05.2017 அன்று நண்பகல்

12.30 மணிக்கு முப்பெரும் விழா பொதுக்கூட்டமானது ஆயர் அவர்கள் தலைமையில் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. இளைஞர் இயக்கத் தலைவர் சகோ



டைட்டஸ் வரவேற்புரை வழங்க, செயலர் செல்வி பபிஷா ஜூலிட் கடந்த ஓராண்டு நிகழ்வுகளை அறிக்கையாக சமர்ப்பித்தார். தொடர்ந்து இளம் வயதில் சாதனைகள் புரிந்தவர்களுக்கு இளம் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

### பிரியா விடை

தொடர்ந்து இதுவரை இளையர் இயக்க இயக்குநராக பணியாற்றிய இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்களுக்கு பிரியா விடை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. ஆயர் அவர்கள் இளம் சாதனையாளர்களுக்கு வாழ்த்துக்களும், இயக்குநர் தந்தை அவர்களின் பணிகளுக்கு பாராட்டுகளையும், புதிய இயக்குநராக பணிஏற்கின்ற அருட்தந்தை சந்தோஷ் அவர்களுக்கு வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இளைஞர்கள் கலைநிகழ்ச்சிகள் மற்றும் இயக்குநரோடு பணிபுரிந்த அனுபவங்களை பகிர்ந்தனர். புதிய இயக்குநர் அவர்களும் தந்தை அவர்களின் பணிகளுக்கு பாராட்டை தெரிவித்து நினைவுப் பரிசை வழங்கினார். தொடர்ந்து ஏற்புரையாற்றிய அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் தன்னோடு பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தொடர்ந்து



இயக்கப்பாடல் பாட முப்பெரும் விழா இனிதே நிறைவடைந்தது.

### உலக சுற்றுசூழல் தினம்

காரோடு புனித சூசையப்பர் தேவாலய இளைஞர்கள் சார்பில் ஜூன் 11-ம் தேதி உலக சுற்றுசூழல் தினம் கொண்டாடப்பட்டது. பங்கு தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்கள் மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார். குந்நுவிளை முதல் கரோடு சந்திப்பு வரையுள்ள சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டது. ஊர் பொது மக்கள் பலரும் பாராட்டு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மறைக்கல்வி தலைமையாசிரியர்



உட்பட இறைமக்களும் கலந்து கொண்டனர்.

செல்வி பபிஷா,
செயலர்.



FAMILY APOSTOLATE

# குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மதுஅடிமைகள் மறுவாழ்வு மையம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் முதல் வெள்ளிக் கிழமை வரை காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நாட்களில் மருத்துவரை தொடர்பு கொண்டு ஆலோசனைகளும், சிகிட்சைகளும் பெற்றுகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை இயக்குநராக பணியாற்றி தற்போது தாய்மண்ணிற்கு திரும்பச் செல்லும் அருட்தந்தை ஜோசப் நெடும்புறம் அவர்களின் பிரியாவிடை மறுவாழ்வு மையத்தின் சார்பில் மே 24 மதியம் 1 மணியளவில் புதிய இயக்குநர் அருட்தந்தை அஜீஸ் அட்டியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 4 ஆண்டுகள் இவ்வலுவலகத்தில் சேவைப் பணியாற்றிய தந்தை அவர்களுக்கு மருத்துவர், அலுவலக பணியாளர் ஆகியோர் கலந்து கொண்டு விருந்துண்டு நினைப்பரிசுகளையும் வழங்கினர். இந்நிகழ்வை அலுவலகத்தின் அருட்சகோதரி அவர்கள் ஒருங்கிணைத்தார்.

### திருமண தயாரிப்புப் பயிற்சி

திருமண தயாரிப்புப் பயிற்சி வகுப்பு மே 19 காலை 10.00 மணி முதல் 21 மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. நிறைவு நாள் மதியம் 2.00 மணி முதல் பயிற்சியாளர்களின் பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெற்றது. பயிற்சிக்கு பங்குத்தந்தையிடமிருந்து பயிற்சி அனுமதிப் படிவம் வாங்கி பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

### மாதர் ஜோதிஸ்

மே 20 சனிக்கிழமை மதியம் 2.30 மணிக்கு நடைபெற்ற மாதர் ஜோதிஸ் இயக்க கூடுகையில் இதுவரை இயக்குநராக பணி யாற்றிய அருட்தந்தை ஜோசப் நெடும்புறம் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது. மாலைக்கோடு திருமதி அனிதா அவர்களின் இறைவணக்கப் பாடலோடு தொடங்கிய இக்கூட்டத்தில் புதிய இயக்குநர் அருட்தந்தை அஜூஸ் அட்டியில் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் சிறப் புரையாற்றி முன்னாள் இயக்குநர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தினார். தொடர்ந்து மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பொறுப் பாளர்கள் பிரியாவிடை பாடல் பாடினார்கள். மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட தலைவி திருமதி நிஷா அவர்களும் தந்தை அவர்களோடு பணியாற்றிய அனுபவத்தை பகிர்ந்தார். நினைவுப் பரிசும் தந்தை அவர்களுக்கு

வழங்கப்பட்டது. தொடர்ந்து தந்தை அவர்கள் ஏற்புரையின் போது தன்னை வளர்த்த தக்கலை மறைமாவட்டத்தின் அன்பு மேன்மேலும், தான் வளர உறுதுணையாகும் என்றும் தன்னோடு பணியாற்றிய அனைவருக்கும் நன்றியையும் கூறினார். நிறைவாக திருமதி மரிய அற்புதம் அவர்கள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் ஒவ்வொரு அலகிலிருந்தும் வழிகாட்டிகளும், பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்,
இயக்குநர்.

---

**BIRTHDAYS, FEAST DAYS, ORDINATION DAYS OF REV. FATHERS**

| FEAST DAY | JUNE | | BIRTHDAY |
|---|---|---|---|
| Fr. Justin Sutheesh | 01 | 03 | Fr. Johnsilal Arackaparampil |
| Fr. Antony Jose | 13 | 04 | Fr. Justin Cheruvelil |
| Fr. Atony Chundelikkatt | 13 | 12 | Fr. Kurian Kunnumpuram |
| Fr. Peter Kizhakkeyil | 29 | 21 | Fr. Sajan Nettaponghu |
| | | 25 | Fr. Mijo Puthenpurayil |
| Fr. Matheus Robert | 29 | | ORDINATION DAY |

---

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

“பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்படியுங்கள். ஆண்டவரின் அடியவருக்கு இதுவே ஏற்புடையது (எபே 6:1)”

**பொறுப்பாளர் கூட்டம்**

குழந்தை ஈசோ இயக்க பொறுப்பாளர் கூட்டம் 13.05.2017 அன்று கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் நடைபெற்றது. இதில் ஆண்டுவிழா பற்றி திட்டமிடப்பட்டு ஒவ்வொரு பங்குகளுக்கும் கலைநிகழ்ச்சிகள் பகிர்ந்தளிக்கப் பட்டது. ஆண்டுவிழா 03.06.2017 அன்றும் 2017-2018 ஆம் கல்வியாண்டு தொடக்க விழா 03.07.2017 அன்றும் நடைபெறும் என இயக்குநர் அவர்கள் அறிவித்தார்.

அருட்தந்தை ஜோமோன்,
இயக்குநர்.

## குழந்தைகள் பாராளுமன்றம்

கன்னியாகுமாரி சமூக சேவை சங்கம் மற்றும் தமிழ்நாடு சமூக சேவை சங்கம் இணைந்து அன்னை



தெரசா குழந்தைகள் பாரளுமன்றம் என்ற புதிய அலகின் துவக்கவிழா மற்றும் பெறுப்பாளர் பதவியேற்பு விழா புனித ஜேம்ஸ் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூகச் சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு சமூகச் சேவை சங்க நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. செல்லபாண்டி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார். புனித வியாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் மற்றும் கன்னியாகுமரி சமூகச் சங்க திட்ட அலுவலர் திருமதி ஷீபா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் 29 குழந்தைகள் பாரளுமன்ற உறுப்பினர்களும், அன்னைத் தெரசா குழந்தைகள் பாரளுமன்ற ஊக்குவிப்பாளர் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## SPARK 2017

ஏழை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூகச் சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் EDUCARE மாணவர்களுக்கான கோடை காலமுகாம் சங்கமத்தில் வைத்து SPARK 2017 எனும் தலைப்பில் மே மாதம் 14 முதல் 21 வரை 7 நாட்கள் நடைபெற்றது. இதில் சுமார்



81 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர். அவர்களுக்கு முகாம் நடத்துவதற்காக சலேசியன் துறவற சபையிலிருந்து 4 அருட்சகோதரர்கள் வருகை புரிந்தனர். முகாமின் எல்லா நாட்களும் திருப்பலியுடன் துவங்கப்பட்டது. மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதும் பயிற்சியும் மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்ற வாழ்க்கைக் கல்வியும், திறமைகளை வளர்பதற்கான பேச்சு, ஆளுமை, தலைமைத்துவ பண்பு ஆகியவை வளர்த்துவதற்கான வகுப்புக்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. Camp Fire, Treasure hunt போன்ற புதுமையான நிகழ்ச்சிகள் மாணவர்களை மகிழ்ச்சியின்வெள்ளத்தில் ஆழ்த்தின. முகாமின் நிறைவுவிழா பெரும் மதிப்புக்குரிய குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நிறைவேறியது. மாணவர்களின் மனதில் மறக்க முடியாத பொன்நாட்களாக இந்நாட்கள் அமைந்தது.

## Summer Thrill 2017:

கோடைக்காலத்தை மாணவர்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூக சேவைச் சங்கம் சார்பில் Summer trill என்ற மாணவர்களுக்கான கோடைக்கால முகாம் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் மே மாதம் 22 முதல் 24 வரை 3 நாட்கள் நடைபெற்றது. இதில் சுமார் 30 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு முகாம் நடத்துவதற்காக சலேசியன் துறவற சபையிலிருந்து இரு அருட்சகோதரர்கள் வருகை புரிந்தனர். அவர்கள் மாணவர்களுக்கு பிழையில்லாமல் எழுத எழுத்துப் பயிற்சி வழங்கினார்கள். மேலும் ஆங்கில உச்சரிப்புப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, ஆளுமைப் பயிற்சி, நினைவாற்றல் பயிற்சி, தலைமைத்துவப் பண்பினை வளர்த்தும் பயிற்சி என பல்வேறு பயிற்சி வகுப்புக்களும் புதுமையான விளையாட்டுகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அருட்தந்தை சஜி எல்ம்பாசேரில்
இயக்குநர்

---

**மூன்று மாத கால ஆன்மீகப் பயிற்சி**

அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் மூன்று மாத கால ஆன்மீகப் பயிற்சிக்காக செகியோன் தியான இல்லம் செல்ல இருக்கிறார்.

**10 நாட்கள் இளையோர்ப் பணி பயிற்சி**

இளையோர்ப் பணி ஆன்மீக வழிகாட்டிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்களுக்கான 10 நாட்கள் பயிற்சிக்காக, மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும், அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களும் பெங்களூர் செல்கின்றனர். பயிற்சி ஜூன் 1 முதல் 10 வரை நடைபெறுகிறது.

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## மத்திய சபை ஆண்டுவிழா

தக்கலை மத்திய சபையின் 19வது ஆண்டுவிழா மே 28 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு



பெயர்பதிவுடன் ஆரம்பமாக, 18 ஆண்டுகள் மறைமாவட்டத்தில் வின்செந்திய சபை கடந்து வந்த பாதை காணொளி காட்சியாக காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து 10.30 மணிக்கு பிலாங்காலை வட்டார சபையினரின் ஆரம்ப செபத்துடன் முதல் அமர்வு ஆரம்பமானது. மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து வின்செந்திய சபை பற்றிய வினாடி வினாப் போட்டியை இளைஞர் பிரதிநிதி சகோ. பெர்லின் அவர்கள் நடத்த, தலைமைப் பணியாளர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். தொடர்ந்து தேசிய ஆன்மீக பயிற்சியாளர் சகோ. பிரான்சிஸ் அவர்கள் கருத்துரை வழங்கினார். பின்னர் ஆயர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாக செயலர் சகோ. எட்வின்சன் அறிக்கை சமர்ப்பித்தார். ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி வின்செந்தியப் பணியில் 50 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற களியல் புனித மரியன்னை கிளைச்சபை சகோ. தங்கராஜ், முழுக்கோடு புனித தோமையார் கிளைச்சபை சகோ. சௌந்தரராஜ் மற்றும் 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வயலின்கரை புனித ஆன்றனி கிளைச்சபை சகோ. பீட்டர், களியல் புனித மரியன்னை கிளைச்சபை சகோ. ஜெஸ்டஸ், பிலாங்கரை புனித செபஸ்தியார் கிளைச்சபை சகோ. அருள்தாஸ், நெட்டா புனித தோமையார் கிளைச்சபை சகோ. எபி தாமஸ், சகோ. ராபர்ட் ஆகியோருக்கு வாழ்த்துப்

பரிசு வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து துணைத் தலைவர் சகோ. மணிவண்ணன் அவர்கள் நன்றி கூற படந்தாலுமூடு வட்டார சபையின் இறுதி செபத்துடன் பொதுக்கூட்டம் நிறைவடைந்தது.



தொடர்ந்து திருப்பலி அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற மதிய விருந்துடன் மதியம் 2 மணியளவில் விழா இனிதே நிறைவு பெற்றது. நிகழ்வை சகோ. றாபி அவர்கள் தொகுத்து வழங்கினார். நித்திரவிளை கிளைச்சபையின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.

## சூசைபுரம் வட்டார சபை

**ராஜாவூர் மனநோயாளிகள் சந்திப்பு**

பிலாங்கரை புனித லொரேட்டோ மாதா ஆலயத்தில் செயல்பட்டு வரும் புனித செபஸ்தியார் ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைச்சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை டோஜி அவர்கள் வழிகாட்டுதலுடன் நடைபெற்று வருகிறது. 27.5.2017 அன்று இரு கிளைச்சபைகளும் பங்கு மக்களுடன் சேர்ந்து ராஜாவூர் திருத்தலம் சென்று நோயாளிகளையும் ஏழைகளையும் சந்தித்து சுமார் 100 நபர்களுக்கு மதிய உணவு வழங்கப் பட்டது

**முதியோர் இல்லம் சந்திப்பு**

கிள்ளியூர் புனித அன்னைத் தெரசா மற்றும் புனித மேரி கிளைச்சபை சார்பில் 17.5.2017 அன்று முஞ்சிறை அன்பக முதியோர்களை சந்தித்தனர். ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் முதியோர்களை சந்தித்து அவர்களுக்காக செபித்தார். இந்நிகழ்வில் அருட்சகோதரி ஜெயின் மேரி உட்பட 10 கிளைச்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

## நித்திரவிளை வட்டார சபை

**திருமண உதவி**

நித்திரவிளை வட்டார சபை சார்பில் கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் கிளைச்சபைக்குட்பட்ட பெண்மணி ஒருவருக்கு 18.5.2017 அன்று திருமண உதவியாக ரூ.5,500/- வழங்கினர்.

சகோ. ஷாஜன்,
செய்தித்தொடர்பாளர்.

**ஜெர்மன் நாட்டில் அருட்பணி**

தக்கலை மறைமாவட்டத்தின் ஆவணக் காப்பாளராகவும், மறைமாவட்ட உயர் மட்ட குழுவின் உறுப்பினராகவும் கடந்த 9 ஆண்டுகளாக பணியாற்றிய அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் ஜெர்மன் நாட்டில் அருட்பணிக்காக செல்ல இருக்கிறார்.

## அருட்சகோதரர்களிடமிருந்து...




விடுமுறைக்காக வீடு திரும்பிய அருட்சகோதரர்கள் மறைமாவட்டத்திற்கு வருகைத் தந்து பல்வேறு மறைப்பணிகளை செய்த பின்னர் 2017-2018 கல்வியாண்டின் தொடர் கல்விக்காக ஆலுவா, கோட்டயம், தலசேரி, பெங்களூர் ஆகிய குருத்துவக் கல்லூரிகளில் பயிலும் அருட்சகோதரர்கள் மே 30 அன்றும் உஜ்ஜயின் மற்றும் திருச்சூரில் பயிலும் மாணவர்கள் மே 16 மற்றும் 22 அன்றும் புறப்பட்டுச் சென்றனர். வாராங்கல், சத்னா கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஜூன் 3, 23 அன்று செல்ல இருக்கிறார்கள்.

இவ்வாண்டு அருட்சகோதரர்கள் சன்ஜோ, பிபின், ஆல்பின் ஜாண் ஆகியோர்கள் ஆலுவா சலேசியன் குருத்துவக் கல்லூரியில் தத்துவயியல் கல்வியை மேற்கொள்கின்றனர்.

உரோமையில் பயின்று வரும் திருத்தொண்டர்கள் சுபின் மற்றும் ஷிஜோ இம்மாதம் தாய்மறை மாவட்டத்துக்குத் திரும்புகிறார்கள்.

### இளங்குருத்துவக் கல்லூரி

இவ்வாண்டு முக்சூட்டுக்கல் இளங்குருத்துவக் கல்லூரி ஜூன் 1 அன்று திறக்கப் பட்டது. தற்போது முதலாமாண்டில் 11 மாணவர்கள் உட்பட மொத்தம் 22 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

### வி.பி.வி

அருட்சகோதரர்கள் விசுவாசப் பயிற்சி விழா (வி.பி.வி) தயாரிப்பு பயிற்சி நடத்தியதோடு இயன்ற அளவு அனைத்து பங்குகளிலும் மே 30 முதல் வி.பி.வி பயிற்சி யளித்தனர். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்களுக்கும், அருட்சகோதரர்களின் இயக்குநராக இருந்து பணியாற்றிய அருட்தந்தை ஜெஸ்டின் மற்றும் சங்கமத்தில் அனைத்து வசதிகளும் செய்து தந்த அருட்தந்தை ஜோண்சிலால் அவர்களுக்கும் நன்றி.

### சுற்றுலா

இவ்வாண்டு மே 15 அன்று அருட்சகோதரர்கள் கேரளா மாநிலத்தின் பத்தனந்திட்டா கெவி பகுதிக்கு இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர்.

கடந்த ஆண்டு அருட் சகோதரர்களின் தலைவராக பணியாற்றிய திருத்தொண்டர் ஜெபனேஷ் அவர்களுக்கு நன்றி.

அருட்சகோ. டோஜி,
அருட்சகோதரர் தலைவர்.

மறைமாவட்டச் செய்திகள்



# மறைமாவட்ட செய்திகளும் நிகழ்வுகளும்

### பிரியா விடை

பல்வேறு மறைமாவட்டம் மற்றும் துறவற சபைகளிலிருந்து நமது மறைமாவட்டத்தில் பணியாற்றி சொந்த மறைமாவட்டத்திற்கு திரும்பும் அருட்தந்தையர்கள் ஜோசப் நெடும்புறம், குரியன் குந்நுந்புறம் எம்.எஸ்.டி, ஜோசப் தண்ணிப்பாறா எம்.எஸ்.டி, பீட்டர் கிழக்கேல், பெலிக்ஸ் சச ஆகியோர்களுக்கு பிரிவு உபச்சார விழா மே 9 அன்று நடைபெற்றது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் அருட்தந்தையர்களின் பணிகளுக்கு பாராட்டு தெரிவித்து வாழ்த்துரை வழங்கினார்.

### சீனாய் தியான மையம் திறப்பு

கல்லுவிளையில் அமைக்கப் பட்டுள்ள சீனாய் தியான மையத்தை மே 7 அன்று உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் திறந்து வைத்தார். காலை 11 மணிக்கு பேரயார் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து சகோ. மாரியோ ஜோசப் அவர்களின் தியான உரையும் நடைபெற்றது. தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

### தமிழ் புலமை முகாம்

தக்கலை கத்தோலிக்க இயக்கத்தின் நறுமுகிழ் அலகும், தக்கலை CRI அமைப்பும் இணைந்து, அருட்சகோதரிகளுக்கான தமிழ் புலமை முகாம் 21.05.2017 மாலை 4.30 மணி முதல் தொடங்கி 27.05.2017 அன்று மாலை வரை ஒருவாரம் நடைபெற்றது. இம்முகாமில் பல்வேறு துறவறச் சபைகளைச் சேர்ந்த 19 அருட்சகோதரிகள் பங்கேற்று பயன்பெறறனர். அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் இந்நிகழ்வை தலைமையேற்று நடத்தினார்.

### உயர் பேராயர் சந்திப்பு

உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆஞ்சேரி அவர் 2017 மே, 6 அன்று தக்கலை மறைமாவட்டத்தை சந்தித்தார்.

மே, 6 அன்று கல்லுவிளையை வந்தடைந்த அவர், மாலை 5 மணியளவில் அருட்சகோதரிகளை சந்தித்தார். தொடர்ந்து மறை மாவட்ட குருக்களையும் சந்தித்தார். அவ்வேளையில், அகில உலக திருச்சபையைக் குறித்தும், சீரோ மலபார் சபையின் குருக்களைக் குறித்தும் பேசினார்.

### மறைமாவட்ட மறைபணியில்

ஓராண்டு குருத்துவப் பணிவாழ்வின் பயிற்சிக்குப் பிறகு அருட்தந்தையர்கள் ரிட்டோ தூம்புங்கல், ஜஸ்டின் சுதீஷ், அனில் ராஜ், அஜின் ஜோஸ் ஆகியோர் மறைமாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர்.




# மறைவட்ட செய்திகள்

## சூசைபுரம் மறைவட்டம்

### சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா

சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா மே 1 முதல் 7 வரை நடைபெற்றது. தூத்துக்குடி கத்தோலிக்க ஊழியர்களின் நற்செய்திப் பெருவிழா 3 நாட்கள் நடைபெற்றது. ஆடம்பர நற்கருணைப் பவனி, செபமாலை தேர்பவனி, இராசைத் திருப்பலி மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

### விவிலிய விசுவாசப் பயிற்சி விழா

சூசைபுரம் வட்டாரத்தின் அனைத்துப் பங்குகளிலும் விசுவாசப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. குறிப்பாக பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மாணவர்களின் தனித்திறமையை ஊக்கப்படுத்தும் விதமான நிகழ்சிகள் நடைபெற்றது.

06.5.2017 அன்று மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் விசுவாசப் பயிற்சி ராலி நடைபெற்றது.

### பிரியாவிடை மற்றும் பணியேற்பு

24.05.2017 கிள்ளியூர் புனித தேவமாதா ஆல்யத்தில கடந்த ஓராண்டு சிறப்பாக பணியாற்றிய அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் மாறுதலாகி முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்திற்கு சென்றார். பங்கு மக்கள் இணைந்து சென்று வழியனுப்பி வைத்தனர்.

அதே நாளன்று புதிதாக நியமனம் பெற்ற அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வருகை தந்து பணியேற்றுக் கொண்டார்கள். பங்குமக்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் 27.5.2017 அன்று துணைப் பங்குத்தந்தை பொறுப் பேற்றுக் கொண்டதோடு மாதாபுரம் பங்குத் தந்தையாகவும் பொறுப்பேற்றார். அவரோடு காரோடு பங்குத் தந்தையும், பங்கு மக்களும் வருகை தந்திருந்தனர்.

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலய துணைப் பங்குத்தந்தையாக அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஸ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். சீனாய் தியான இல்ல துணை இயக்குநராக பாலப்பள்ளம் பங்குத்தந்தை அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் பொறுப்பேற்றார்.

## நித்திரவிளை மறைவட்டம்

### முஞ்சிறை

முஞ்சிறை திருத்தலத்தில்

விசுவாசப் பயிற்சி விழா மே 1 முதல் 3 நாட்கள் மிகச் சிறப்பாகச் கொண்டாடப் பட்டது. முதல் நாள் பயிற்சி வகுப்பை அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் செபத்துடன் தொடங்கி வைத்தார். அருட்சகோதரர் ஜார்ஜ் அவர்கள் பயிற்சியை வழிநடத்தினார். மதிய உணவுடன் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக 20.5.2017 அன்று அருட்தந்தை அவர்கள் தலைமையில் பெற்றோர்களும், மாணவர்களும் இணைந்து இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர்.

வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் மே 1 முதல் 7 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அருட்சகோதரர் அஜின் அவர்கள் பயிற்சியை வழிநடத்தினார்.

கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மே 8 முதல் 12 வரை 5 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அருட்சகோதரர் றோபின் அவர்கள் வழிநடத்தினார்.

21.5.2017 அன்று பங்குத்தந்தை அருட்தந்தை மிஜோ அவர்களின் பிரிவு உபச்சார விழா நடைபெற்றது. 24.5.2017 அன்று மதியம் 2 மணியளவில் பங்குத் தந்தையை வழியனுப்பி வைத்தனர். மாலை 6.30 மணிக்கு புதிய பங்குத் தந்தை அருட்தந்தை லின்ஸ்லால் அவர்களை குருகுல முதல்வர் அவர்கள் தலைமையில் வரவேற்றனர்.

நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்தில் மே 1 முதல் 6 வரை விசுவாசப் பயிற்சி விழா நடைபெற்றது. நிறைவு நாளன்று விசுவாசப் பேரணியும் நடைபெற்றது.

வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் ஏப்ரல் 30 முதல் மே 6 முடிய காலை 7 மணி முதல் 11.30 மணி வரை விசுவாசப் பயிற்சி விழா நடைபெற்றது. அருட்சகோதரர் றோபின் அவர்கள் பயிற்சியை வழிநடத்தினார்.

## தக்கலை பிலாங்காலை மறைவட்டம்

### மறைக்கல்வி ஆரம்பம்

கல்லுவிளை புனித அன்னைத் தெரசா ஆலயத்தில் 2017-2018 ஆம் கல்வியாண்டின் மறைக்கல்வி வகுப்புகள் 04.6.2017 அன்று



தொடங்கப்பட்டது. அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அரிசியில் சிறார்களுக்கு எழுத்துக்களை எழுத வைத்து மறைக்கல்வி வகுப்புகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தலைமையாசிரியை அருட்சகோதரி ஆன்ஸ் சி.எம்.சி

அவர்கள் முன்னிலை வகித்தார்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### கோடை வகுப்புகள் நிறைவு விழா

ஓசானாம் கணினி மைய கோடைக்கால கணினி வகுப்புகள் நிறைவு விழா மற்றும், டி.பி டெக் வகுப்பின் மூன்றாமாண்டு தொடக்க விழா 03.06.2017 ன்று மைய ஒருங்கிணைப்பாளர்



திரு. சௌந்தரராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ஜாண் டி பின்டோ அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். 10ஆம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் பயிலும் 43 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டது.

12-ஆம் வகுப்பு படித்த மாணவ மாணவிகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

### கிறிஸ்டியன் தியானம்

01.5.2017 முதல் 3.5.2017 மஞ்சாலுமூடு மறைவட்டத்தில் உள்ள 3ஆம் வகுப்பு முதல் 12ஆம் வரை உள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கும் மறைவட்ட அருட்தந்தையர்களின் தலைமையில் கிறிஸ்டின் தியானம் நடைபெற்றது. அருட்தந்தை ஷோஜோ அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றினார். தொடர்ந்து 3 முதல் 6 வரையுள்ள மாணவர்களுக்கு சி.எம்.சி அருட்சகோதரிகளாலும் 7 முதல் 12 வரை தென்காசி சகோதரர் சேவியர் குழுவினராலும் நடத்தப்பட்டது. இரண்டாம் நாளன்று அருட்தந்தை செபி அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். நிறைவு நாளன்று ஆயர் அவர்கள் திருப்பலி அர்ப்பித்து செபித்து அறிவுரை வழங்கினார். தியான உரைகளுக்கிடையயே நற்கருணை ஆராதனை, ஒப்புரவு வழிபாடு, செபமாலை போன்ற திரு நிகழ்வுகளும் நடைபெற்றன.

### பொன்விழா

17.5.2017 அன்று அருட்சகோதரி கொரேத்தி அவர்களின் பொன் விழா முக்கூட்டுக்கல் திரு இருதய ஆலயத்தில் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப் பாடம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அருட்சகோதரி அவர்களை வாழ்த்தி உரையாற்றினார். இவ்விழாவில் முக்கூட்டுக்கல் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

### திருஇருதய திருவிழா

பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத் திருவிழா 24.5.2017 அன்று மாலை 5 மணியளவில் பங்குத்தந்தை சாக்கோ ஆக்காத்தற அவர்களின் திருக்கொடியேற்ற லுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை லூக்கா அவர்கள்

தலைமையில் திருப்பலியும் சீயோன் தியானக் குழுவினரின் நற்செய்திப் பெருவிழாவும் நடை பெற்றது. மூன்றாம் நாளன்று நடைபெற்ற பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவில் 10 மற்றும் 12 வகுப்புகளுக்கான அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசு வழங்கப்பட்டன. நான்காம் நாளன்று திருப்பவனியும் நடைபெற்றன. நிறைவு நாளான 28.5.2017 அன்று காலை 9 மணிக்கு காலைத்தொழுகையும் தொடர்ந்து அருட்தந்தை குரியன்சாலங்கடி அவர்கள் தலைமையில் முதல் திருவிருந்து மற்றும் உறுதிபூசுதல் அருளடையாளங்கள் வழங்குதலும் நடைபெற்றன. தொடர்ந்து பங்குத்தந்தை அவர்களால் கொடியிறக்கப்பட அன்பின் விருந்துடன் இனிதே நிறைவடைந்தது.

## படந்தாலுமூடு மறைவட்டம்

### பிரிவு உபச்சார விழா

அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலய இளைஞர் இயக்கம் மற்றும் குறும்படக் குழு சார்பில் குருதியில் பூத்த மலர் குறும்பட வெளியீட்டாளரும், மூன்று ஆண்டுகள் மறைமாவட்ட இளைஞர் இயக்குநராக பணியாற்றி உயர்கல்வி பயிலச் செல்லும் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்களுக்கு பிரியா விடை வழங்கும் நிகழ்வு ஜூன் 4 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய திருப்பலியை இளையோர் இயக்குநர் அவர்கள் சிறப்பித்தார். தொடர்ந்து நடைபெற்ற பிரியாவிடை கூடுகையில் இளைஞர் இயக்க செயலர் ஷாபினி அவர்கள் தந்தையோடு பணியாற்றிய அனுபவங்களை பகிர்ந்தார். குறும்பட இயக்குநர் திரு. லாரன்ஸ் அவர்கள் தந்தை அவர்களின் பணி சிறக்க வாழ்த்துரையாற்றினார். தொடர்ந்து பிரியாவிடை பாடல் பாடப் பட்டது. தந்தை அவர்கள் இளைஞர்கள் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டுமென்று கூறி அனைவருக்கும் பல்வேறு புத்தகங்களை வழங்கியதோடு தனது பணிகளுக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து ஏற்புரையாற்றினார். இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்தந்தை மாத்யூ முளங்ஙாசேரில் இயக்க வழிகாட்டி அருட்சகோதரி மேரி டோம் மற்றும் அருட்சகோ ஜோசீனா அவர்களும் உடனிருந்தார்கள்.



தகவல் சேகரிப்பு: திருமதி.ஹேமா/சினேக லதா/செலின் மேரி

தக்கலை மறைமாவட்ட கத்தோலிக்கப் பள்ளிகள் 2016–17 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10 மற்றும் 12 வகுப்பு அரசு பொதுத்தேர்வு முடிவுகள்

| Name | Total appeared | Passed | Highest |
|---|---|---|---|
| **Secondary School Results 2017** | | | |
| John Paul II Kulasekaram | 19 | 19 | 496 |
| St. Alphonsa, Nagercoil | 195 | 195 | 495 |
| St. Michael's, Kattathurai | 69 | 69 | 494 |
| Jaya Matha, Christurajapuram | 18 | 18 | 494 |
| Sacred Heart, Padanthalumoodu | 125 | 125 | 493 |
| APJM HSS, Soosaipuram | 81 | 81 | 493 |
| St. Joeph's School, Panpoli | 105 | 105 | 492 |
| Carmel Matha, Kanyakumari | 85 | 82 | 491 |
| Carmel Jyothi, Colechal | 43 | 43 | 490 |
| Mount Carmel, Muzhucode | 45 | 45 | 490 |
| MMKM H.School, Varuthattu | 54 | 54 | 489 |
| St. James High School, Mankarai | 74 | 74 | 488 |
| Holy Family, Mukkootukal | 79 | 79 | 485 |
| Pulari Matric School, Puthur | 5 | 5 | 484 |
| St Joseph's Pilankalai -CMI | 68 | 67 | 480 |
| St. Mary's, Kaliyal - CMI | 132 | 130 | 475 |
| St Thomas, Netta - CMI | 25 | 24 | 472 |
| Holy Family HS Arukany | 26 | 26 | 450 |
| **Higher Secondary School Results 2017** | | | |
| Alphonsa, Nagercoil | 375 | 375 | 1188 |
| Sacred Heart, Padanthalumoodu | 112 | 112 | 1163 |
| St. Joseph's Matric, Panpoli | 78 | 78 | 1149 |
| APJM HSS, Soosaipuram | 51 | 51 | 1142 |
| St. Mary's, Kaliyal CMI | 171 | 163 | 1096 |
| Carmel Matha, Kanyakumari | 64 | 64 | 1095 |
| Holy Family, Mukkootukal | 83 | 83 | 1024 |



Youth Volunteers
For Tamil Intensive Course



Fr. Joseph Nedumpuram
Bids Adieu to Malaicode





Sinai Retreat Centre
Inauguration - 07.05.2017



Farewell to Fr. Felix SDB



TCYM Camp - May 19-21


For Priva[illegible] Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570